## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2009 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2009) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஔ) தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2009

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). *2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2009), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2009)*@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். திருத்தம் சொல்கிறீர்களா, என்ன சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மேம்பாட்டினை ஊக்கப்படுத்துவதற்கும் புதிய முதலீடுகள் செய்வதை எளிதாக்குவதற்கும் நடைமுறைத் தேவைப்பாடுகளைக் குறைத்து இங்கே ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்குவதற்காக நிலம் கையகப்படுத்தித் தருவது, மின்சாரம் தருவது, அடிப்படை வசதிகளை

---

@ *20–7–2009* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

உருவாக்கித் தருவது, சலுகை விலையில் அவர்களுக்கான குடிநீர் வழங்குவது என்று பல்வேறு சலுகைகளை நாம் தொழில் முதலீட்டாளர்களுக்கு வழங்கிக்கொண்டு வருகிறோம். இந்தச் சூழ்நிலையில், இவர்களுக்கு இன்னும் கூடுதலாகச் சலுகைகளை வழங்குகின்ற வகையில் இம்மாநிலத்தில் தொழில் அமைப்புத் திட்டங்களை செயல்முறையில் நிறுவுவதற்குத் தேவைப்படக்கூடிய தடையில்லை என்பதான பல்வேறு அனுமதிகளை வழங்குகிற அளவிலும், அதேபோன்று அவர்கள் தொழில் அமைத்து உருவாக்குவதற்கு மாநில அளவிலே மற்றும் மாவட்ட அளவிலே அமைப்பு ஒன்று அமைக்கப்படுவதாகச் சொல்கிறீர்கள். அதிலே விவசாயப் பிரதிநிதிகள் இல்லை, அங்கே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் இல்லை, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இல்லை. ஏற்கெனவே நீங்கள் நிலத்தைக் கையகப்படுத்தி, நோக்கியா போன்ற பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும், விமான விரிவாக்கத்திற்கும், இன்னும் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கும் விவசாய நிலங்களைத் தாரை வார்த்து எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் தந்துகொண்டிருக்கிறீர்கள். ஆக, இதுபோன்று இன்னும் ஒரு சட்டம் கொண்டு வந்து நீங்கள் தந்தால், ஏழையெளிய, விவசாய மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும். அங்குள்ள மண்ணின் மைந்தர்களுக்கான வேலைவாய்ப்பு உரிமைகள் மறுக்கப்படும். ஆதலால், தனியார்களுக்காக இதுபோன்று நீங்கள் சட்டங்களைக் கொண்டு வந்து, இருக்கின்ற சலுகைகளைக் காட்டிலும் அதிகமான சலுகைகளைத் தருவதைவிட, இந்தச் சட்டத்தின்மூலம் நம்முடைய தமிழக அரசு விவசாய நிலங்களைக் கையகப்படுத்தி மின் திட்டங்கள் மற்றும் ஏனைய திட்டங்களை உருவாக்கித் தருவதற்கு, பாதுகாப்பான ஒரு நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என்கிற கருத்தைத் தெரிவித்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொழில் தொடங்குவதற்கான சலுகை அல்ல. தொழில் தொடங்குகிற நேரத்தில், கால தாமதமாகிறது பாருங்கள், அதற்கு வழங்கப்படக்கூடிய சலுகை. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த வகையில் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவில் உள்ள அந்தக் குழுக்களில் தொழில் துறைச் செயலாளர், இதர துறைச் அலுவலர்கள், அதேமாதிரி மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே இப்போது காலதாமதம் ஆகின்றபோதிலும், தொழில் தொடங்குவதற்கு, மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வுக்கு அதனை உட்படுத்துகிறோம். ஆனால், இந்தச் சட்டத்தின்படி பார்த்தால் அவ்வாரியத்தைக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. Pollution Control Board-னுடைய அனுமதியே இல்லாமல்கூட தொழில் செய்வதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை, அதெல்லாம் இல்லை. அது தவறு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்வது தவறு. Single window system-ன் அடிப்படையிலேதான் இது கொண்டு வரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 28 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 28 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–20

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2009) நிறைவேற்றப்பெற வேண்டும்.*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS